.1986

15

வர்ம சூட்சம்

20 - அ

16.12.86.

வர்மஏடு

முடித்தநாள் - 16.12.86

திருவே துணை.

படுவர்மம் - 13க்கும். தொடுவர்மம் - 96க்கும் தட்டவும் இளக்கவும்.

1. திலதவர்மம்

நாளியளறியவும், இணம் அறியவும் வர்மத்தின் தமைறியவும் விபரம். நெற்றி, புருவத்திலும், ஒரு நெல்லிலும் தாழ "திலதவர்ம" மதின் வர்மம் கொண்டான் இணம் - / கண்ணிரண்டும் மூடி அண்ணாந்து இருக்கும். 1½ மணி நேரம் கழிந்தால் மாறித்துப் போகும். அதற்குமுன் இளக்குமுறை செய்ய வேண்டும். / தலைமுடியைத் தூக்கிப் பிடித்து கைமேல் கை பிணைத்து உச்சியில் ஒரு அடி அடித்து உடன் கழுத்தினை இடத்தும், வலத்தும் திருப்பி செவி-யில் ஊதி உடன் கெட்டிப் பிடித்து தூக்கி உதறி விடவும். நெக்க இளகும் வெந்நீர் கொடுக்கவும்.

2. நட்சத்திர வர்மம்

கடைக்கண்ணிலும், ஒரு விரற்கடை யாலத்திலும் அடுக்க "நட்சத்திர வர்மத்தில் வர்மம் கொண்டான் இணம். / முகத்தில் மூக்கு கோணும். 7 மணி நேரம் கழிந்தால் மாறித்துப் போம். எனவே அதற்கு முன்னர் இளக்குமுறை செய்ய வேண்டும். எடுத்திருத்தி இருபுறமும் கை வைத்துப் பார்த்தால் வர்மம் கொண்டவிடம் குளிர்ந்திருக்கும். கொள்ளாத இடம் வெதும்பும். வெதும்புந்தலங்கண்டு இளக்குமுறை செய்ய வேண்டும்.

வர்மங்கொண்டவனை எடுத்திருத்தி இருபுறமும் கைவிரித்து பதமாக அமுக்கி கீழ்நோக்கி தடவி விடவும். உடன் கைமேல் கை பிணைத்து உச்சியில் ஒரு அடியும் அடித்து செவியிலும் மூக்கிலும் ஊதி கழுத்தை நாலு புறமும் கீழ்நோக்கி தடவி கெட்டப் பிடித்து கீழ்நோக்கி உதறி விடவும். இளகும்.

3. பிடரி வர்மம்

பிடரியில் முடிமுகிந்த தலத்தில் இருக்கும் பிடரிவர்மத்தின் வர்மம் கொண்டாள் இணம்: பதைப்பும் அருபமும் நுரையும் தள்ளும். கண் இருண்டு துடிக்கும். 3 3/4 மணிநேரம் கழிந்தால் மரித்துப் போம். அதுக்கு முன் செய்ய வேண்டிய யோகக் முறை. எடுத்திருத்தி நாடியும், தலையும் நேரே தூக்கி நாடியை குபீரென்று மேல்நோக்கி உயர்த்தி பிடரியில் நின்று கீழ்நோக்கி மூன்றுதரம் தடவி உடன் கைமேல் கை பிணைத்து உச்சியிலொரு அடியும் அடித்து காதிலும் மூக்கிலும் ஊதி கட்டித் தூக்கி உதறி விட வர்மம் இளகும்!

4. உறக்க வர்மம்

கழுத்தில் நாடி அசைப்பத்தில் உறக்க வர்மம். அதின் வர்மம் கொண்டாள் இணம். வாய் மூடப் போகும். நாக்கு தாழ்ந்து போகும். உடலெல்லாம் குளிர்ந்து போகும். 4 மணிநேரம், கழிந்தாலும் மரித்துப் போகாது.

தட்டி இளக்காதிருந்தாலும் தானே
எழும்பும் ~~அதற்கின்~~ அதற்குரிய இளக்குமுறை:-
எடுத்திருத்தி நாடியை ஏந்திப் பிடித்து நெஞ்சில்
நின்று மேல்நோக்கித் தடவி கைமேல் கை-
பிணைத்து உச்சியில் பதத்தில் 3 அடியும்
அடித்து கழுத்தை இடத்தும் வலத்தும் திருப்பி
நாசி இரண்டிலும் ஊதி பிடரி இளக்கி ஒரு
ஆணிநடம் கீழ் கை விரித்து ஒரு அடியும்
அடித்து கட்டிப் பிடித்து உதறி விடவும்.
இளகும்.

5. திவளைவர்மம்

வர்மம் 5 நெஞ்சின் காரையெலும்புக்கு
இருவெத்தி தொண்டைக் குழிக்கு ~~கு~~ வர்மமான
திவளை வர்மத்தின் வர்மங் கொண்டான் இணம்;
ஒரு நாழிகைக்கு ஒருமுறை இருமும், தலை
இளைந்து விழும். இரண்டு இரண்டும் துடிக்கும்.
பல்லுப் பூண்டு போகும். இதிலும் 1/2 மணிநேரம் ~~நாழிகை~~
~~1½ க்கு~~ கழிந்தால் மரித்துப் போகும். அதன்முன்
இளக்குமுறை:- எடுத்திருத்தி பிடரிக்கு ஒரு
விரலுக்குத் தாழ கை வைத்து நேர்குத்தி பிடரி-
யையும் நாடியையும் பிடித்து தூக்கி காரை-
யெலும்புக்குத் தாழ கைவிரித்து நொடித்து
உடன் கைமேல் கைபிணைத்து உச்சியா-
லொரு அடியும் அடித்து கட்டிப் பிடித்து
கீழ்நோக்கி உதறி விடவும். கஞ்சி கொடுக்-
கவும்; இளகும்.

சிலம்பு வர்மம்

~~வர்மம்-6~~ நெஞ்சின் உடம்பெல்லி வர்மமானது
யருவிரலிலும் தாழ யுருகுபதி நேரு வர்மம்
அதில் கொண்டால் இணைம் உடம்பெல்லாம்
குளிர்ந்து பேச்சு அற்றுப் ~~பேச்சற்று~~ போம். பல்லும், வாயும்
பூண்டு போகும். அரக்கண் போட்டு முழிக்கும்
வர்மம் உச்சம் கொண்டால் இரத்தம்
கக்கும் அது கண்டு பயப்பட வேண்டாம்
இதின் 12 மணிநேரம் ~~நாழிகை-30~~. கழிந்தால் மரித்துப்-
போம். அதற்கு ~~அதற்கு~~ முன்னர் ~~னால்~~ இளக்க முறை
எடுத்திருத்தி கைமேல் கைபிணைத்து உச்சியில்
ஒரு அடியும் அடித்து நடுமுதுகு வரியல்
புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டி
நெஞ்சிலும், விலாவிலும் கீழ்நோக்கித் தடவி
இறக்கி உடன் கட்டிப்பிடித்துத் தூக்கி
உதறி விடவும். இளகும் இந்த வர்மம்
ஆறையும் அறையாமல் செய்யலாம்.

அடப்ப வர்மம்

~~வர்மம்-7~~. விலாவில் முன்பெல்லினம்
நாலு விரலுக்கு யர் ~~கு~~ அடப்ப வர்மமதில்
வர்மம் கொண்டால் இணைம். காலும் கையும்
முதிர்ந்து போகும் வாயில் பதை தள்ளும்.
11 மணிநேரம், ~~இதின் நாழிகை-28~~. கழிந்தால் மரிச்சிப்போம்.

இளக்க முறை:- எடுத்திருத்தி மறுவிரலின்
பிறங்கால் கொண்டு ஒருதட்டுந் தட்டி
முதுகுவரியன் புறங்கால் கொண்டு ஒருதட்டுந்
தட்டி கைமேல் கைபிணைத்து உச்சியிலொரு
அடியும் அடித்துத் தூக்கி உதறி விடவும்.
விரல் இரண்டிலும் ஒன்று போல தடவி
யிறக்கி இளகும்.

~~வர்மம். 8.~~ அத்தி சுருக்கி வர்மம்

:- விரலின் முன்டையிலும்,
இருவிரலிலும் தாழ "வலிய அத்தி சுருக்கி"
வர்மத்தில் கொண்டால் இளகும். பிடித்
தொரு முழத்தில் இறுகும். ~~இதின தாழுகை-~~

~~15.~~ இதற்கு இளக்க முறை:-
அச்செவ்விலும் மறுபுறத்தின் புறங்கால் -
கொண்டு ஒரு தட்டுந் தட்டி நடுமுதுகு வரியன்
புறங்கால் கொண்டு ஒருதட்டுந் தட்டி
கைமேல் கைபிணைத்து உச்சியிலொரு
அடியும் அடித்து இரண்டு கையையும்
விரித்து விரல் இரண்டிலும் ஒன்று
போலே பதத்தில் தட்டி கீழ் நோக்கி தடவி
இறக்கி உடன் கட்டிப் பிடித்து தூக்கி
உதறி விடவும். இளகும். உழக்கரிசியள்
அளவான உப்பிட்டுக் கஞ்சி கொடுத்தாலும்
41 நாட்கள் சென்றும் போது முதலில் இருந்த-
வாறே இருந்தால் மாக்கும். இந்த வர்மம்

செய்யாதே கொடிய பாவம். சர்வ இருவினைகளை
சத்தியம்.

~~வர்மம் 9~~ சிறிய அத்திச் சுருக்கி வர்மம், வலிய அத்திச் சுருக்கி வர்மம்

விரலில் மூன்றுவிரலிலும் தாழ
"சிறிய அத்தி சுருக்கி" வர்மத்திலும் வலிய அத்தி
சுருக்கி வர்மத்திலும் குணம். ஒன்று
இருக்கு ~~நாழிகை 16~~ 4 மணிநேரம் கழிந்தால் மரித்துப் போம்.
இதற்கு இளக்க முறை!. அச்செவ்விலும்
மறுபுறத்தின் புறங்கால் கொண்டு ஒரு
தட்டுந்தட்டி கைமேல் கைபிணைத்து
(முதுகுவரியாய் ~~[illegible]~~ சூழும் தட்டி.) உச்சியி-
லொரு அடியும் அடித்து நெஞ்சிலும்,
விரலிலும் கீழ்நோக்கி தடவி ~~[illegible]~~
கட்டிப்பிடித்துத் தூக்கி கீழ் நோக்கி
உதறி விடவும். இளகும். உறுவாளரிசி
இட்டுக் கஞ்சி கொடுக்கவும். சுகமானாலும்
ஒரு புறம் சரிந்து நடக்கும்.

~~வர்மம் 10~~ உறுமி வர்மம்

தொப்புளுக்கு நாலுவிரலுக்கு
மேலே உறுமி வர்மம். அதில் கொண்டால்
குணம். உறுமி அடியாப்போலே அமரும்.
கண் விழித்துப் பார்க்கும். விழித்தால் விளி
கேளாது. காலின் பெருவிரல் துடிக்கும்.
இதன் ~~நாழிகை 7½~~ 3 மணிநேரம் கழிந்தால் மரித்துப்
போகும்.

இதுக்கு விளக்க முறை:- அச்செவ்விக்கு
மறுபுறத்தில் முதுகுவரியில் புறங்கால் கொண்டு
ஒரு தட்டுந்தட்டி நெஞ்சின் நின்று வயிறு
வரையும் கீழ்நோக்கி தடவி கைமேல்
கை பிணைத்து உச்சியிலொரு அடியும்
அடித்து தட்டி தூக்கி உதறி விடவும்.
இளகும்

நேத்திரக் (வர்மம்) ஸ்தலம்

வர்மம்.11. கொப்புளுக்கு நாலு விரலுக்குக் கீழ்
நேத்திரக் காலமதில் கொண்டால் குணம்.
அசிங்காய் மோளும் துள்ளி போடும். உட-
லெல்லாம் நிமிர்ந்து போகும். மேல்மூச் சுக்-
-கும். இதினையே ~~நாழிகை 33~~ 8 மணி நேரம் கழிந்தால்
மரித்துப் போகும் ~~இது~~ இளக்க முறை:-
கொண்ட இடத்தில் படங்கால் கொண்டு
கீழ்நோக்கி பதத்தில் சமட்டி இறக்கி மாறி
நின்று கால்களின் பெருவிரலின் உப்புக்குத்தி
காலு கொண்டு ஒரு அமட்டு சமட்டி
உடன் கைமேல் கைபிணைத்து உச்சிய-
-லொரு அடியும் அடித்து நடுமுதுகு வரியின்
புறங்கால் கொண்டு ஒரு தட்டுந் தட்டி
கட்டித் தூக்கி கீழ்நோக்கி உதறி விடவும்.
இளகும். இது சத்தியம்

அடக்கவர்மம்

~~வர்மம் - 12~~. இந்த வர்மத்தின் விவரம்.

அடக்கவர்மம் என்றும், அண்டவர்மம் -
மென்றும், கன்னடகாலமென்றும், வித்துவர்ம-
மென்றும், தண்டுவர்மமென்றும் பேர்.
~~ஆக்கி கிரமம்~~, அடக்கவர்மத் திருத்தியல் கொண்-
டால் குணம். உடம்பெல்லாங் குன்னி
குறைந்து போகும். கண்ணிரண்டும்
மூடிப்போகும். இதின் நாழிகை - 19½
கழிந்தால் மரித்துப்போகும். அதற்கு முன்
இளக்குமுறை:- அண்டையாகிலும், நாக்காலி-
யாகிலும், தலையணையாகிலும் கட்டி
அதன்மேல் வைத்து கைமேல் கை பிணைத்து
(உறைத்து) உச்சியிலொரு அடியும் அடித்து
நடுமுதுகு வரியில் கீழ் புறங்கால் கொண்டு
ஒரு தட்டுந் தட்டினால் உடன் விழித்திடும்.
திமிர் விடும். உடன் இடது கையில் (அகலம்)
பிடித்து உவிரன் விதியில், எட்டுவிரல்
நீளத்தில் வெள்ளைச் சீலை கீறி பச்சைத்தண்-
ணீரில் (குளிர்ந்த நீர்) நனைத்து சுற்றி விடவும்.
தீர்க்கும். இது சத்தியம்.

வர்மம் - 13. :- இந்த வர்மம் 13-ம் திட்டியான் - 13- பிசாசு பிடிக்கும். ஆக வர்மம் 13-க்கும் தண்ணீர் ஓதியெறிய மந்திரம். ஓம் நசிவா-யா - வாகாவென் றெறியவும். இளகும். இவைசத்தியம் - ஆக வர்மம் 13க்கும் ஆக காலத்தின் யிளக்குமுறை:- எடுத்திருத்தி மூல ஆதாரத்தின் பிறமே, வாங்க இருத்தியன்று இரண்டுஇருத்தி யுண்டு. அதின் 2 விரல் கொண்டு இருத்தி உடன் கைமேன் கை பிணைத்து உச்சியின் பதத்தின் 2 அடியும் அடித்துடன் நடுமுதுகு வரியன் புறங்கான் கொண்டு ஒரு தட்டுந் தட்டி வலது கை வரித்து நெஞ்சின் பதத்தின் தட்டி வலது விலாவும், இடது விலாவும் கீழ் நோக்கித் தடவி புறமே நின்றுகொண்டு கயக்இருத்தியின் 2 கையுமிட்டுத் தூக்கி நிலத்தில் ஊன்றி குத்தி செவியாதும் மூக்கிலும் ஊதி யிளக்கிக் கொள்ளவும். இளகும். இது சத்தியம். அடக்கம் பார்த்து இளக்கமுறை - நாசியில் பத்தி புறங்கை வைத்துப் பார்த்தால் சரம் திட்டியான் இளக்கிக் கொள்ளவும். இந்த நாட்டம் பார்க்கிறது எப்படியானால் பஞ்ச

வைத்துப் பார்த்தால் சரம்தட்டடியவன் பிழைக்கக் கொள்ளவும். இந்தப்படி நேட்சம் பார்த்தால் சரம் ~~[illegible]~~ தட்டவில்லையானால் இறக்க வேண்டாம். மீறாது. இது சத்தியம்.

<u>சிவராக்குறிப்பு</u>

வர்மம் 13-க்கும் பெருங்கிளையும், தலையும் தட்டுவோனதும், ~~[illegible]~~ இருவகத்தின்படி, முன்னேட்டின்படி தெளியாமல் சரியாகச் சொன்னேன். இது சத்தியம்.

இந்த வர்மம் ~~[illegible]~~ அறிய வேண்டுமானால் 18 பணமும், 75 உருப்படி வேட்டியும், ~~[illegible]~~ ஏ. தெய்வம் முன் கொடுத்து பொன்னும் விளக்கும் வைத்து சத்தியம் செய்து வாங்கிக் கொண்டு இந்த வருமாணி ஒடு கொடுக்கவும். இது சத்தியம்.

இந்த வருமாணி ஒரு யாருக்கென்றால் இச்சென்னைப் பட்டணத்தில் அந்தவர்னத் தெருவிலிருக்கும் அச்சணாங்கம் தொழிலின் மகன் முகைதீன் சராகத்திறுக்கு எழுதிக் கொடுத்தது. பிறரென்றால் மனையாளத்தில் கொச்சையின் பந்தனையன் இருக்கும் மருவினை அவர்கள் மகன் முகம்மதீதின் அண்ணாவி இந்த வருமாணி பாத்திரம் செய்கிறது அல்லாமல் (மருவா) ஒருவருக்கும் சொல்லவும் காட்டவும் கூடாது.

இது சத்தியம்.

நானாகிலும், என் மக்ணாகிலும் வந்து கேட்டால்
இந்த நடு ~~(பொருத்து) எழுதி~~ உபயார்த்தமெழுதிக் கொடுக்கவும்.
அண்ணாவிக்கு மனம் நோகாமல் தியாத்துள்ள-
வரையும் விசாரித்துக் கொள்ளவும். இந்த
வநுமாணியோடு நீடூழி காலம் வாழ்க ஆமீன்.
இயாசைப்பவான் மீன்இரு முகம்மது நபி துணை
1832. வருஷம் புரட்டாசி மாதம். 6-ந்தேதி
எழுதி முடிந்தது. முற்றும். ஆமீன்

நன்றாக இருவே முகம்மது நபி துணை.

1. எதிரம் வெட்டி கட்டி கடைதனை கொடுத்து எழும்பி ஆறு வாஙெந் தீர்ந்து தொழுது கொள்ளவும். ௨. எதிரம் வெட்டி கட்டி பிடித்தெதிரம் வெட்டி 6 வாஙெந் தீர்ந்து கடதனை முந்தனை வெட்டி கீதாங்கி யெடுத்து மேதாறு வைத்துக் கொள்ளவும். 3. எதிரம் வெட்டி கட்டி பிடி. தெதிர வெட்டி 6 வாஙெந் தீர்ந்து கடைதனை 3 வெட்டி இடத்தே அடித்து வலத்தே கட்டி 6 வாஙெந் தீர்ந்து கீதாங்கி மேதாறு வைத்துக் கொள்ளவும்.

4. எதிரம் வெட்டி கட்டி 6 வாஙெந் தீர்ந்து கடைதனை 3 தீர்ந்து இடத்தே அடித்து வலத்தே கட்டி 6 வாஙெந் தீர்ந்து கடைதனை, முனைதனை வெட்டி யெதிவான் அடித்து முனைதனை வைத்துக் கோரி வலத்தை அடித்து இடத்தே பிடித்து உச்சம் கீதார் மேதார் வெட்டி நெஞ்சில் குத்தி ஆறு வாஙெந் தீர்ந்து அந்தமாறி மறுபுறமும் இதுபோலவே செய்து கொள்ளவும்.

5. எதிரம் வெட்டி இடத்தே அடித்து வலத்தே பிடித்து 6 வாஙெம் வெட்டி

⊛ இந்தப் பகுதி தெளிவாகத் இல்லவில்லை. எனினும் சுவடிப் பகுதி மாறாமல் தரப்படுகிறது என்பதைக் குறிப்பிடப்படுகிறது.

கடத்தனை, முனைத்தனை வெட்டி 6 வாளைந்
தீர்ந்து முனைத்தனை கோரி போட்டு 4 வாளைம்
போட்டு உச்சம் கீதாரை மேதாரை வெட்டி
நெஞ்சின் இத்தி விளாவக்கி அடித்து சுத்த-
மாறிக் கொள்ளவும். மறுபுறம் இதுபோலே
செய்து கொள்ளவும். 6. ஏதிரம் கட்டி
6 வாளைந் தீர்ந்து கடத்தனை, முன்தனை
வெட்டி ஆறு வாளைந் தீர்ந்து, கடத்தனை,
முன்தனை வெட்டி ஆறு வாளைந் தீர்ந்து
யேறி வாளைடித்து நாலு வாளைந்து செய்து
உச்சம் கீதாரை மேன்தாரை அடித்து
விளாவக்கி அடித்து நெஞ்சின் இத்தி
ஆறு வாளைந் செய்து காக்கி அடித்து
ஆறு வாளைந் செய்து சுத்தமாறிக்
கொள்ளவும். மறுபிறமும் இதுபோலச்
செய்து கொள்ளவும். 7-வது. வெத்தி
அடித்து, இடத்தே பிடித்து, இடத்தே
அடித்து, இடத்தே பிடித்து மேதாரை
மூணு வாளைம் அடித்து கீதாரை மே-
தாரை அடித்து குதித்து போகவும்.
8 வது - 3 வாளைம் வெட்டி இடத்தே
கோரி, வலத்தே வைத்து கீதாரை யெடுத்து
மேதாரை மூணு வாளைம் வெட்டி, கீதாரை
மேதாரை வெட்டி குதித்துப் போகவும்.

10-வது. மண்டை கழுத்து விளாவுக்கு அடி காதுக்கும் அடித்த மண்டைக்கு ஒரு அடி அடித்து கீதாரை மேதாரை வெட்டி இத்துப் போகவும். 11-வது. திசைத்-துக்கு பிடரிக்கு மேலே யிடது நட்சேத்திரத்-துக்கு ஆறு ஒருதா பூட்டிணான் ஜப்புக்கு மேலே பள்ளவர்மம் இதின் விரல் கோண ..... தள்ளி கழுத்தவும். இந்த வர்மம் கொண்டான் மாறு பள்ளையன் தட்டி யெழுப்பவும் இதுக்கு நாழிகை 21.

தொடர்ச்சி இல்லை.

ஒடுவண்! மூக்கு மூணு விரலுக்கு மேலே திலதகாலம் இது கொண்டான் மாறுபுறந் தட்டி யெழுப்-பவும். இது செய்யும் இணம்:- கண் அண்ணாந்து பார்க்கும். இதுக்கு நாளிகை $3\frac{3}{4}$.

கடைகண்ணின் நட்சேத்திர காலம். இது கொண்டான் மாறுபுறம் தட்டி யெழுப்பவும். இது செய்யுங் இணம் - ஒரு புறம் சரிந்து பார்க்கும். இதுகண்டாறியவும் இதுக்கு நாழிகை. $5\frac{1}{2}$. ~~முட்டி சிக்கி~~

முட்டி சிக்கி மேலே உறக்க காலம். இது கொண்டான் மறுபுறந் தட்டி எழுப்பவும். இது செய்யுங் இணம். உறங்கினவர் போலே கிடக்கும். இது கண்டாறியவும். இது நாழிகை -$17\frac{1}{2}$.

மாருக்கு நாலு விரலுக்கு மேலே அடித்தால் வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இது செய்யுறாவ் இனம். நாக்கு தள்ளும். வாயாலானே நுரை நுரை-யாகத் தள்ளும். இது கண்டாறியவும். இதுக்கு நாழிகை - 13 1/2.

அதுக்கு மூணு விரலுக்கு மேலே விலாவு வரும். இது கொண்டால் மறு-புறந் தட்டி யெழுப்பவும். இது செய்யுறாவ் இனம். விலாவுப் போலவே உண்ணிக் கொண்டும் கவுந்து கிடக்கும். இது கண்டாறியவும். இதுக்கு நாழிகை - 9 1/4.

நட்சேத்திர காலத்துக்கு நாலு விரலுக்கு அடுத்து செவி இத்து வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி எழுப்பவும். இது செய்யுறாவ் இனம். அருண்டு விழுந்து கிடக்கும். இது கண்டாறியவும். இதுக்கு நாழிகை 3 1/2

பிடரிக்கு ஒரு விரலுக்கு மேலே உறக்க காலம். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இது நாழிகை. 17 1/2.

அதுக்கு இரண்டு விரலுக்குக் கீழே காக்கி திருவிலாகும். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இதுக்கு நாழிகை. - 1 3/4.

நெஞ்சின் கொழுந்தில் குன்னை வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இது செய்யுங் குணம். சரீரம் முழுவதும் காயும். செத்தவன் போலே கிடப்பான். இது கண்டறியவும். இதுக்கு நாழிகை - 7 1/2

அதுக்கு நாலு விரலுக்குக் கீழே குடல் வரும். இது கொண்டால் மறுபுறந் தட்டி யெழுப்பவும். இது செய்யுங் குணம். வயிறு உளறும். இது கண்டறியவும். இதுக்கு நாழிகை. 13.

கொப்புளுக்கு 3 விரலுக்குக் கீழே மோத்திரக் காலம். இது கொண்டால் மறு-புறந் தட்டி எழுப்பவும். இது செய்யுங் குணம். ஒரு பானை இ பானை போலே மோளுவான். இது கண்டறியவும். இதுக்கு நாழிகை. 1 3/4.

பீசத்தின் அண்ட வரும். இது கொண்டால் உச்சியையும், உள்ளங்காலிலும் தட்டி முதுகிலிருந்து கீழே வரையும் தடவி கழுத்திலிருந்து நெஞ்சின் வழியாக தடவி இறக்கி விடவும். மேத்தின் தட்டி யெழுப்பிக் கொள்ளவும். இதற்கு நாழிகை. 4 3/4.

X

வர்மம் 12-ம் வஜ்ரபிரம இடதுசெவி வலது செவி இடது விலாவுக்கு வலதுவிலாவு இடது துடிக்கும், வலது துடிக்கும். கொளுந்துக்கு அதற்கு நேர் முதுகு. இடன் வர்மத்துக்கு அ- அதற்கு நேர் முதுகு. மொத்த காலத்துக்கு நேர் பிட்டம். அடக்கானும் நெஞ்சில் குத்தி பட்டியன் ரெண்டு இடத்தில் தட்டி விடவும் யூணி விடவும்.

வலது மணி கொட்டு
இடது மணி கொட்டு
மண்டைக்கு
கடத்தை கொப்புளுக்கு
கீழ்த்தாற் நெருத்தசீவுவை.
